# பத்திரிக்கை செய்தி

## மனுவை சாதகமாக முடித்து தர லஞ்சம் வாங்கிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலக உதவியாளர் கைது

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், க.ஓகையூர் கிராமத்தை சேர்ந்த ஐயப்பன் என்பவரது மகன் கோவிந்தராஜ் என்பவருக்கும் அதே ஊரைச்சேர்ந்த கருப்பன் என்பவரது மகன் சுப்பிரமணி என்பவருக்கும் நிலப்பட்டா பெயர் சேர்ப்பது மற்றும் நீக்குவது சம்மந்தமாக கோவிந்தராஜ் என்பவர் கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் மனு மீது விசாரணை நடந்ததாகவும் அந்த மனு சம்மந்தமாக வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் விசாரணை மேற்கொண்ட போது எதிர் மனுதாரரான சுப்பிரமணி நீதிமன்றத்தில் வழக்கு தொடங்க உள்ளதாக பிரமாண பத்திரத்தை காண்பித்தவுடன் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக அ4 உதவியாளரை அழைத்து மனுவை முடிக்க உத்தரவிட்டதாகவும் அந்த மனுவை எதிர் தரப்பிற்கு சாதகமாக முடிப்பதாக அ4 உதவியாளர் திரு.பாலு அவர்கள் சுப்பிரமணி அவர்களின் மகன் மணி என்பவரிடம் நான் உனக்கு சாதகமாக மனுவை முடித்து தருகிறேன், எனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கொடு என்று கேட்டதாவும், லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் திரு.மணி, இது குறித்து இன்று 12.07.2023 தேதி கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தார். இப்புகார் மனு மீது பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பாலு, அ4 உதவியாளர் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.